பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 28 வெள்ளிக்கிழமை (12-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 47

## யாழ்ப்பாணத்திலிருந்து படை வாபஸ் இல்லை

### தளுவத்தை கூறுகிறார்

சாவகச்சேரி, ஜன. 12

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினரை எக்காரணம் கொண்டும் அகற்ற முடியாதென இராணுவத் தலைமை அதிகாரியும் வடக்கு - கிழக்கு நடவடிக்கை தளபதியுமான மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்தை கூறியுள்ளார்.

இதனால்கிழக்கில் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது அரசு திணறுவதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

வடபகுதியில் மற்றொரு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன் கிழக்கில் பாரிய இராணுவ நடவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலைப் பகுதியில் படையினர் மீது தாக்குதல்

### சிப்பாய் ஒருவர் பலி; மற்றவர் காயம்

சாவகச்சேரி, ஜன. 12

பொன்னாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் மண் அரண் அமைத்துக்கொண்டிருந்தபோது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருக்கின்றார்கள்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மண் அரண் அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த டோஸர் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது; சிப்பாய் ஒருவர் பலியானார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்

இத்தாக்குதல் சம்பவத்தின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்பேதும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

(உ)

## புலிகளை வெளியேற்றுவதற்கு

# கிழக்கில் ஒரு மாதத்தினுள் பெரும் படை நடவடிக்கை!

### படையினர் ஷெல் தாக்குதல்

கரணவாய், ஜன. 12

தொண்டமானாறு, கெருடாவில் பகுதியில் நேற்றுக் காலையும் நேற்று முன்தினம் இரவும் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களினால் அப்பகுதிகளிலுள்ள வெற்றுக் கட்டடங்களும், சந்நிதிகோவிலைச் சூழவுள்ள அன்னதானமடக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

## நாடாளுமன்றத்தில் ரத்வத்தை அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி. 12

அடுத்த நான்கு வாரங்கள் கழித்து, அவசரகாலச் சட்டத்தை மீண்டும் நீடிப்பதற்காக நான் நாடாளுமன்றத்துக்கு வர முன்னர், கிழக்கு மாகாணத்தில் புலிகளின் சவால்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இவ்வாறு அறிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக மீண்டும் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் கிழக்கிலிருந்து புலிகளை அகற்ற உறுதியான நடவடிக்கைகளை அரசு எடுக்கவுள்ளது.

யாழ். தாக்குதல்களுக்காக கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான துருப்புகள் வடக்கே நகர்த்தப்பட்டனர். இதனால் கிழக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொய்வடைந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அதிரடித் தாக்குதலில் திருமலையில் 2 படையினர் நேற்று பலி

கொழும்பு, ஜன. 12

திருகோணமலைப் பகுதியில் திருகோணமலை—கண்டி வீதியில் உள்ள வில்கம் விகாரைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்ததாகவும், மற்றொரு சிப்பாய் காயமடைந்ததாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையிலிருந்து கொழும்பு செல்வதற்கான இந்தப் பிரதான வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-6-10)

## யாழ். நகர் வெற்றிக் குதூகலத்தை வாழ்க்கை செலவு உயர்வு மறைப்பு

### அவதானிகள் கருத்து

கொழும்பு, ஜன. 12

ஐந்து வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது சிங்கள மக்கள் மத்தியில் நிலவிய குதூகலம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகளால் மறைந்துவிட்டது என அவதானிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக் காட்டியது.

ஒரு வார காலத்தில் தொலைபேசி மற்றும் மின் விநியோகக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. அடுத்த சில தினங்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் பஸ் கட்டணங்களினால் விலைவாசி மேலும் உயரும்.

மக்களின் பிரச்சினைகளை ஒரு குறுகிய காலத்துக்கே யுத்த வெற்றி மூலம் மறக்கடிக்கச் செய்யமுடியும்.

— இவ்வாறு அந்த செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது. (உ-6)

### பத்திரிகையாளர் தடை நீடிப்பு

யுத்தச் செய்திகள் மீதான தணிக்கையை ஸ்ரீலங்கா அரசு நீக்கியுள்ள போதிலும் கொழும்பு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வடபகுதிக்குச் செல்வதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஆராயப்பட்டதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வன்னி பிரதேசத்தில் 6,500 வீடுகள்

### அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைக்கும்

சாவகச்சேரி, ஜன. 12

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 6 ஆயிரத்து 500 வீடுகளை அமைத்துக் கொடுக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் (யு. என். எச். [illegible]) முடிவு செய்துள்ளது.

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். அலுவலக அதிகாரி திரு. பபியோ மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

[illegible] 500 வீடுகளை அமைக்கும் பணி அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட நாள்களின் பின் கிளிநொச்சிக்கு 60 லொறிகளில் உணவுப்பொருள்

கிளிநொச்சி, ஜன. 12

நீண்ட நாள்களின் பின் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 60 லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்து வர ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிய வந்தது.

கொழும்பில் தங்கியுள்ள கிளிநொச்சி அரச அதிபர் திரு எஸ். தில்லைநடராசா அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படுவதாக தெரியவந்தது.

நேற்று முதல் மூன்று நாட்களுக்கு இந்தப் பொருள்கள் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## சாவகச்சேரியில் 10 நாள்களில் 117 பேர் நாயினால் கடியுண்டனர்!

தென்மராட்சி, ஜன. 12

சாவகச்சேரிப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் கடிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இம்மாதம் முதல் பத்து நாள்களுக்குள் 117 பேர் நாயினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

விசர்நாய் கடிப்போருக்கு ஏற்றப்படும் ஏ. ஆர். வி. தடை மருந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் முடிவடைந்துவிட்டதால், நோயாளர்கள் மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (இ-117)

## 300 தற்காலிக மலசலகூடங்கள்

சாவகச்சேரி, ஜன. 12

இடம் பெயர்ந்து நலனோம்பு நிலையங்களிலும், வேறு இடங்களிலும் தங்கியுள்ள மக்களின் பாவனைக்கென யாழ். மாநகரசபையும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து இதுவரை 300 தற்காலிக மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளன.

இவ்வாறான மலசலகூடங்களை ஒரு வருடத்துக்குப் பயன்படுத்த முடியும் என யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

மேலும் மலசலகூடங்களை அமைப்பதற்கான திட்டம் இருப்பதாகவும் —

இதனைச் செயற்படுத்துவதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

## தண்ணீருக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, ஜன. 12

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் இப்பகுதியில் தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-117)

## மலேரியா நோய்க்கு மருந்து இல்லை

கொழும்பு, ஜன. 12

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் மலேரியாநோய் அதிகமாகப் பரவி வருகிறது. ஆனால் மலேரியா நோய்த் தடுப்புக்கான மருந்து வழங்குவதில் அரசு அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மலேரியா நோய்க்கான மருந்தை கோரி அரசுக்கு விண்ணப்பித்து பல நாள்களாகியும் அரசிடம் இருந்து இது வரை பதில் ஏதும் இல்லை என்றும் —

இது மனிதாபிமானத்துக்கு எதிரானது என்றும் — வன்னிப் பகுதி அரச சுகாதார நலவாழ்வு இயக்குநர் டாக்டர் சிவகுரு தெரிவித்துள்ளார். (இ-3)

## உடப்பு கடல் பகுதியில் ஆயுதங்கள் மீட்பாம்

கொழும்பு, ஜன. 12

உடப்பு கடல் பகுதியில் கரையோரமாக நிலத்தின் அடியில் பல ஆயுதங்களும், வெடிக்கவைக்கும் மருந்துவகைகளும் புதைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டு உடப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

500 கிலோ வெடிக்க வைக்கும் மருந்து வகைகள், ஏராளமான ஜி 3 ரக துப்பாக்கிகள் இவற்றுள் அடங்கும்.

இச்சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டதாகவும்—

இவர்களில் ஒருவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# டாக்டர்கள் பற்றாக்குறையினால் மந்திகையில் நோயாளர் அவலம்

## பலர் திரும்பிச் செல்கின்றனர்

மந்திகை, ஜன. 12

யாழ். போதனாவைத்தியசாலை இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து, அந்த வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள், நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாக வடபகுதி நோயாளர்கள் பெரும் அவல நிலைகளை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுவும் கர்ப்பிணிப்பெண்கள், பெண் நோயியல் சம்பந்தமான நோயாளிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருந்த சமயம் அங்கே பெண்நோயியல், கர்ப்பிணிநோய்கள் சம்பந்தமான நான்கு வைத்திய நிபுணர்களும், ஓர் உதவிவைத்திய நிபுணரும் பணியாற்றி வந்தனர்.

ஆனால் தற்சமயம் இப்படியான நோயாளிகளை மந்திகை அரசினர் வைத்திய சாலையில் பணியாற்றும் ஒரே ஒரு வைத்திய நிபுணரே பார்வையிட்டு வருகிறார்.

மக்கள் இடம்பெயர்ந்துள்ள இந்த வேளையில் —

இந்த நோயாளிகளின் எண்ணிக்கையும் இப்பகுதிகளில் பன்மடங்கு அதிகரித்துள்ள சூழ்நிலையில் — இந் நோயாளிகளை பார்வையிடுவதிலும், அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் தனி ஒருவராகவே அவர் செயற்பட்டு வருகிறார்.

மந்திகையில் வாரத்தில் ஒருநாள் மட்டும் நடக்கும் பெண்நோயியல், கர்ப்பிணிப் பெண்கள் கிளினிக்குக்கு முன்னரைவிட பலமடங்கு அதிக நோயாளர்கள் வருகிறார்கள். அவர்கள் காலை முதல் மாலை வரை காத்துக் கிடந்து கிளினிக்கை முடிக்க வேண்டியுள்ளது. பலர் கிளினிக்கைமுடிக்காமலேதிரும்பிச் செல்லவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. (15)

# ஜி. சீ. ஈ. பரீட்சை வினாத்தாள்களில் மாற்றம் செய்வதற்கு முடிவு

கொழும்பு, ஜன, 12

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை போன்ற தேசிய அளவில் நடைபெறும் பரீட்சைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தொடர்பான வினாத்தாள்கள் மாற்றம் செய்வதற்கு கல்வி, உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது மேற்குறிப்பிட்ட பாடங்கள் தொடர்பாக ஒவ்வொரு வினாத் தாள்களே தயாரிக்கப்படுகின்றன. இதற்குப் பதிலாக ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று வினாத் தாள்களைத் தயாரிக்கலாம் என அமைச்சு கருதுகிறது.

மேற் குறிப்பிட்ட பாடங்களில் மாணவர்கள் தங்களுக்குள்ள அறிவுக்கேற்ப வினாத் தாள்களை தெரிவு செய்து விடை எழுதுவதற்கும்சித்தியடையாமல் விடுவதை தவிர்ப்பதற்கும் வாய்ப்பளிப்பதே இந்த மாற்றத்தின் நோக்கமென கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுக்கேற்ப புதிய ஒழுங்குகளை மேற்கொள்ள விருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்போதுள்ள ஒழுங்குகளின் படி வசதிகள் படைத்த கல்லூரி மாணவர்களும் —

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் — ஒரே வினாத் தாளுக்கே விடையளிக்க நேரிடுகிறது.

இதனால் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஏற்படும் பாதகமான நிலையைப் போக்கும் நோக்கிலேயே தேசிய கல்வி ஆணைக்குழு இந்த சிபார்சை செய்துள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# இடவசதியைத் தேடும் இறுதி ஆண்டு மாணவர்

முறிகண்டி, ஜன. 12

யாழ். பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு பரீட்சைகளுக்குத் தோற்றும் வெளி மாவட்ட மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு கிளிநொச்சியில் போதிய வீட்டு வசதி இல்லாமையால் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

பரீட்சைக்குத் தயார் செய்வதற்கென மன்னாரிலிருந்து வந்த மாணவர்கள் சிலர் கிளிநொச்சியில் உரிய வீட்டு வசதி கிடையாததால் திரும்பிச் சென்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு கலைமாணி, விஞ்ஞானமாணி, மருத்துவமாணி பரீட்சைகள் அடுத்த மாதம் நடைபெற உள்ளன.

தற்போது இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற வெளி மாவட்ட மாணவர்கள் கிளிநொச்சுக்கு வந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் கிளிநொச்சியில் அறை தேடி அலைகின்றனர்.

இன்னும் சுமார் நாற்பது நாட்களில் பரீட்சைக்குதோற்றவுள்ள இம் மாணவர்கள் தங்குமிட வசதியின்றி அலைந்து திரிகின்றனர்.

தற்போதைய நாட்டுநிலைமையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் நிறைந்து காணப்படுகின்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு, சாவகச்சேரி போன்ற இடங்களில் வாடகைக்கு கூட அறைகள் இல்லை. இந்நிலையில் இம் மாணவர்கள் இங்கு நின்று தமது இறுதிப் பரீட்சைக்கு தம்மை தயார் படுத்தி பரீட்சைக்கு தோற்றுவது என்பது மிகவும் சிரமமானது.

எனவே பல்கலைக்கழக நிர்வாகம் மேற்படி விடயத்தில் உடனடியாக அக்கறை எடுத்து இம் மாணவர்கள் தமது இறுதிப் பரீட்சைக்கு தயார்படுத்த தேவையான இடவசதிகளைச் செய்து தர ஆவன செய்யுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தை கேட்டுள்ளனர். (இ-97)

## போரூட் உதவி

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி, பூநகரி, பரந்தன் ஆகிய இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு போரூட் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

அங்குள்ள பாடசாலைகளிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளவர்களுக்கு பாய், போர்வை, நுளம்புவலை, சாரம், துவாய், சவர்க்காரம், குடை, பிளாஸ்டிக்வாளி, கோப்பை ஆகியன வழங்கப்பட்டன.


## யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி 1995 ஆம் ஆண்டு மாணவர்க்கு

கற்றாங்கு ஒழுகவெனும் கல்லூரி வாசகத்தை
பற்றுடனே பணிந் தேத்தி
பதுங்கு குழியில் பஞ்சு விளக்கதனில்
பதுங்கியிருந்து பல்கலை கற்று
பரீட்சை செல்கையிலும் பூவா? தலையா?
பத்திரிகையில் பத்திரன கல்வி அமைச்சு
பதிலென்ன கூறுகின்றது?
எட்டரை தாண்டியும் ஹபரண
எட்டியும் வரவில்லை இன்னும்
எட்டிப்பார்த்ததும் எழுந்திட்ட சுப்பர் சோனிக்
எதிரியவன் ஏவிவிட்ட எறிகணைகள் எதிரொலிக்க
ஏற்றமுடன் காட்டிய சாதனை பெரிதே
எழுந்தயுவ ஆண்டதனில் இளைப்பாறிய
அதிபரின்
எண்ணமதில் தேன்வார்த்த சகோதரர்
அனைவரையும்
தமிழ்ச்சங்கம் சார்பாக தலைதாழ்த்தி
வாழ்த்துகிறோம்.

தமிழ்ச்சங்கத்தினர்
(96, 97 உயர்தர வகுப்பினர்)

(40155)



## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

அவசர செயற்குழுக் கூட்டம்

காலம்: 13-01-96 சனிக்கிழமை
மு. ப. 10 மணி

இடம்: அதிபர் இல்லம்

(கொடிகாமம் சந்தைக்கு அண்மையில்),
செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்:
ப. மா. சங்கம், கொ. இ. கல்லூரி

40156)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

[12-01-1996]

கொக்குவிலைச் சேர்ந்த

அமரர் சுப்பையா கனகசுந்தரம்

தோற்றம்: 19-05-1942
மறைவு: 13-12-1995

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் அன்பான கணவனாய் கடமைமிகு தந்தையாய் எமை வாழ வைத்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள்

கணேசபுரம்,
கிளிநொச்சி.

(சி/3044)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் வெளியேறியது அரசுக்கு அவமானம்

## வெரித்தாஸ் விமர்சனம்

கொழும்பு, ஜன. 12

யாழ். நகரை சூறையாடும் முயற்சியில் இராணுவம் இறங்கிய வேளையில் —

யாழ். நகரைவிட்டு வெளியேறியுள்ள மக்களில் 5லட்சம் பேர் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி பகுதியில் வாழ்கின்றனர்.

அரசைச் பொறுத்தவரை இது இழுக்குத்தரக்கூடிய விடயம் இப்படி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

மக்களை மீளக் குடியேறுமாறு அரசு பலதடவை அழைப்பு விடுத்தும் புலிகளின் தலைமையையும், நிர் வாகத் திறமையையும் அனுவித்த மக்கள் அரசின் அழைப்பை ஏற்று மீண்டும் யாழ். நகருக்குள் நுழையவில்லை.

இதனால் அவமானமும், ஆத்திரமும் அடைந்துள்ள அரசு தற்போது அகதிகளாக வாழும் மக்கள் மீது நெருக்கடிகளை திணிப்பதுடன் நிவாரணப் பணிகளையும் முடக்கி விடுவதாக ஆய்வாளர்களும், விமர்சகர்களும் கருத்து தெரிவிக்கின்றனர்.

அரசு நிவாரண உதவிகள் அனைத்தையும் தடை செய்திருப்பதுடன் இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கான மருத்துவ உதவிகளை அளிக்கவும் மறுப்பு தெரிவித்து வருகிறது.

அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத யாழ் நகரின் சில பகுதிகளில் உள்ள வங்கிகளுக்கு அரசு பணமுடையை ஏற்படுத்தியிருப்பதால்பொது மக்கள் பெரிதும் துன்புறுவதாக செய்தியாளர் தெரிவிக்கின்றார் இப்படி வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-3)

# துண்டுப்பிரசுரங்களை திணிக்கப் புதிய தந்திரம்

சாவகச்சேரி, ஜன. 12

'' தமிழ்மக்களுக்கான அறிவிப்பு '' '' விடுதலைப்புலிகளுக்கு அறிவித்தல்'' என்ற பெயர்களில் ஸ்ரீ லங்கா அரசு வெளியிடும் துண்டுப்பிரசுரங்கள் மக்களைச் சென்றடைய அரசு புதிய தந்திரத்தைக் கையாள ஆரம்பித்துள்ளது.

இத்தகைய பிரசுரங்கள் இதுவரை ஹெலி, விமானம் மூலமே வானில் இருந்து கட்டுக்கட்டாக வீசப்பட்டு வந்தன.

ஆனால் விமானங்கள் பல புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டதை, அடுத்து அரசு புதிய நடைமுறையைக் கையாள ஆரம்பித்துள்ளது.

நிவாரணம் வழங்குவதற்காக அரசினால் அனுப்பப்படும் பருப்பு, சீனி போன்றவை தற்போது பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டே அனுப்பப்படுகின்றன. அவற்றுக்குள் இத்தகைய துண்டுப்பிரசுரங்களும் மடித்து வைத்து அனுப்பப்படுகின்றன.

கடந்த காலங்களில் நிவாரணப் பொருள்கள் மூடையாகவே அனுப்பப்பட்டன.

தற்போது பொலித்தீன் பைக்கெட்டுக்களில் இவை அனுப்பப்படுவதன் நோக்கம், விமானத்தில் இருந்து போட முடியாத இத்தகைய துண்டுப் பிரசுரங்களை, மக்களிடம் திணிக்கவே எனக் கருதப்படுகிறது. (இ-68)

# அகதிகளாகியுள்ள தமிழர்களின் தேவைகளை அரசு புறக்கணிக்கிறது

கொழும்பு, ஜன. 12

இலங்கையில் தாயக மீட்புப் போரால் அகதிகளாகி இருக்கும் தமிழ் மக்களின் தேவைகளை இலங்கை அரசு புறக்கணித்து வருகிறது.

வெரித்தாஸ் வானொலி இவ்வாறு தெரிவித்துள்ளது.

அகதிகளுக்கென வழங்கப்படும் நிதி உதவிகளை மக்களுக்கு வழங்குவதில் அரசு தேவையற்ற காலதாமதம் செய்வதாகவும்—

மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினைகளை அரசு கண்டுகொள்வதில்லை என்று கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்றும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

இதுபோன்ற தகவல்களை அகதிகளாக இருக்கும் மக்கள் வாழும் பகுதிகளைச் சேர்ந்த அரச அதிகாரிகளே வெளியிடுவதால், அரசின் மெத்தனப் போக்கு வெளிச்சமாவதாக செய்தியாளர் சொல்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இலங்கைக்கு இந்தியா நிதி உதவி

கொழும்பு, ஜன. 12

இலங்கைக்கு இந்தியா 3 கோடி டொலர் உதவியை வழக்கவிருக்கிறது.

இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் இரு நாடுகளின் அதிகாரிகளினாலும் கைச்சாத்திடப்பட்டது.

நுகர்வோரின் தேவைகளுக்காகவே இந்த உதவி வழங்கப்படுவதாகவும்—

இது வரை இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளில் இதுவே ஆகக் கூடியயது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

# ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர் செயல்முறைப் பரீட்சை

## விரைவில் நடைபெறும்

கொழும்பு, ஜன. 12

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் வவுனியா கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டுக்குரிய இந்த செயல்முறைப் பரீட்சைகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்றிருந்தன.

யாழ்ப்பாணத்தில் அப்போது இருந்த நிலைமை காரணமாக அப்போது பரீட்சையை நடத்த முடியாது போயிற்று.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பரீட்சார்த்திகள் இடம்பெயர்ந்து அகதிகளாக பல்வேறு இடங்களில் இருப்பின், வவுனியா கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ். கல்விப்பணிப்பாளர் மூலம் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும்—

சங்கீதம், மனையியல், நடனம் ஆகியவற்றுக்கே செயல்முறைப் பரீட்சைகள் நடைபெற உள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. (இ)

## கிளிநொச்சியில்

# நீர்ப்பாசனம் சீராக மேற்கொள்ள ஒத்துழைப்புக் கோரப்படுகிறது

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள குளங்களின் கீழ் பயிர்ச்செய்கையை மேற்கொள்பவர்கள், சீரற்றமுறையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதால், அவர்களுக்கு சீரான நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல குளங்களிலும் 10 அடிக்கு கீழேயே தற்போது நீர்மட்டம் இருப்பதால் விவசாயிகள் சீரான முறையில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குளங்களுக்கு அருகில் உள்ள விவசாயிகளும், தூர உள்ள விவசாயிகளும் வேறுபட்ட நேரத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதால் இந்நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையை தவிர்க்க குளங்களுக்கு சமீபமாக பயிர் செய்கையை மேற்கொண்டு நீர் வீணாவதைத் தவிர்க்குமாறு கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு. க. சுப்பிரமணியம் கோரி உள்ளார். (இ-20)

## ராட்சத ஆமை கரை ஒதுங்கியது

செம்பியன்பற்று, ஜன. 12

மாமுனையில் உள்ள தொடுவாய் பகுதியில் கடலில் இருந்து சுமார் 7 அடி நீளமுடைய ஆமை ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியது. (இ-36)

## இடம்பெயர்ந்தோருக்கு

# சமைத்த உணவு வழங்க அரச அதிபர் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 12

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்க உதவுமாறு யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் சமையல் பாத்திரங்கள் இன்றி உடுத்த உடுப்புடன் முகாம்களில் தங்கியுள்ளனர் எனவும் —

அவர்கள் தொழில் இன்றி கஷ்ட நிலையில் உள்ளனர் எனவும் —

உணவை சமைத்து உண்ணக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு இல்லை எனவும் —

அவர்களுக்கு சமைத்த உணவு வழங்க உதவ வேண்டும் எனவும் — அரச அதிபர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (இ-3)

# பாடசாலை உபகரணங்கள் படையினரால்தடுத்துவைப்பு

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு எடுத்துவரப்பட்ட பாடசாலைகளுக்கான உபகரணங்கள், தாண்டிக்குளத்தில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மாகாண கல்வியமைச்சு, பாடசாலை உபகரணங்கள், இடாப்புக்கள், ஆசிரியர் கைநூல்கள், பாடத்திட்டங்கள் ஆகியவற்றை வழங்கியிருந்ததாகவும்—

வவுனியா ஊடாக அவை எடுத்துவரப்பட்ட சமயம் படையினர் அவற்றை தாண்டிக்குளத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# தமது பெயரை மாற்றி சிங்களப் பெயர் வைக்கும் தமிழர்கள் அதிகரிப்பு

## 10 ஆயிரம் பேர் இப்படி பெயர் மாற்றி உள்ளனராம்!

கொழும்பு, ஜன. 12

பெயர் மாற்றம் குறித்து புதிய நடைமுறைகள் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்திருப்பதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு அல்லது மூன்று வருட காலத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமது பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றியது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை அடுத்தே புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வந்த புதிய நடைமுறையின்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்கள் காட்டப்படாமல் பெயர்மாற்றம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு சிபார்சுகளை வழங்கவேண்டாமென நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் பதிவாளர்நாயகம் அந்தரங்கச் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார் என கூறப்படுகிறது.

பெயரை மாற்ற விரும்பும் ஒருவர் புதிதாக தனக்கு வைக்கும் பெயரில் ஒருவருட காலத்துக்கு மேலாக அழைக்கப்படவேண்டும். இதனை ஒப்புவிக்கும் விதத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியங்கள் பெறப்பட வேண்டும் என அந்த அந்தரங்கச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதற்கு முன்னர் ஒருவர், தனது புதுப் பெயரால் 6 மாத காலம் அழைக்கப்பட்டால், அது பெயர் மாற்றம் செய்வதற்குப் போதுமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இ-10)

# பஸ்களில் பயணம் செய்ய மட்டு. நகரில் மக்கள் அச்சம்

மட்டக்களப்பில் பஸ்களில் பயணம் செய்ய தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர்.

மக்கள் பயணம் செய்யும் பஸ்களில் இராணுவத்தினரும், அதிரடிப்படையினரும் பயணம் செய்வதே இதற்குக் காரணமாகும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சத்தால் தனியே பயணம் செய்ய அஞ்சும் படையினர், மக்கள பயணம் செய்யும் பஸ்களில் பயணம் செய்கின்றனர். (இ-3)

# இன்னும் மோதத்தில் யாழ்ப்பாணத்தில் வழமையான வாழ்க்கை நிலையாம்

## சிவில் நிர்வாக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 12

அடுத்த ஆறு மாத காலத்தில் வழமையான வாழ்க்கை நிலை யாழ்ப்பாணத்தில் திரும்பும் என்று யாழ். சிவில் நிர்வாகத்துக்கான இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் பாகொட நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ள தேவையான உபகரணங்கள், இயந்திராதிகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

வீதி திருத்த வேலைகள், வைத்திய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரியில் டச் றோட் ஓரம் கட்டை ஒழுங்கையில் 5 பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் தென்னை மரங்கள், மா மரத்துடன் விற்பனைக்குண்டு. தோட்டமும் செய்யக்கூடிய காணி. தொடர்பு S. கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி. (39944)

### மணமகன் தேவை

மகநட்சத்திரம், குற்றமற்ற உதயச் செவ்வாய். 36 வயது, பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள பெண்ணுக்கு அரச, கூட்டுத்தாபன, வங்கி அல்லது வாணிபம் போன்ற சொந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள 36—40 வயதுள்ள இந்து மணமகன் தேவை. இல. 516, மே/பா உதயன், சரசாலை. (39833)

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளுக்குதீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். பகல் 2-00 மணிவரை கரவெட்டி கிழக்கு, ஸ்ரீபத்திர காளி கோவிலில் மாவை விநாயகர் சோதிடம் இடம் பெறும். (39842)

### புத்தகங்கள் தேவை

பழைய தத்துவ நூல்களும், கதைப் புத்தகங்களும் தேவைப்படுகின்றன. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: கந்தையா நூலகம், தும்பளை வீதி, பருத்தித்துறை. (40068)

### SPOKEN ENGLISH

முன்பு சுதுமலையில் இயங்கிய Able Spoken English தற்பொழுது வேம்பிராய் சந்தி, மீசாலையில் நடைபெறுகின்றது. தொடர்புகொள்ளவும். செ. செல்வராஜா. (40154)

### அடையாள அட்டை

அடையாள அட்டைகளை கவரிட்டுக் கொள்வதற்கும், தெளிவான போட்டோப் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் கிளின்கட், சாவகச்சேரி நீதி மன்றம் அருகில். (39936)

## பத்திரிகை மீது வழக்கு

சென்னை, ஜன. 12

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உதவி அளித்ததாக ''ஸ்டேட்மன்'' ஆங்கில நாளேடு கடந்த ஜுலை மாதம் தலையங்கம் வெளியிட்டதற்கு எதிராக தமிழக மாநில அரசு சார்பில் சென்னையில் உள்ள தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. (உ-3)

## அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டு இல்லை

சென்னை, ஜன. 12

தமிழ் நாட்டில் வரும் பொதுத் தேர்தல்களின் போது அ. தி. மு. கவுடன் தேர்தல் கூட்டணி எதையும் வைத்துக் கொள்ளாது என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் திட்டவட்டமாக அறிவித்தார். (உ-3)

## அறிவித்தல்

### சுயசார்பு தொழில் முயற்சி நிதியம்

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்தின் செயற்பாடுகள் மீண்டும் சகல பிரிவுச் செயலகங்களிலும் 16-01-96 தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன. வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த பயனாளிகள் தங்கள் நடவடிக்கைகளை சனி/ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் கீழ்க்குறிப்பிடப்படும் எமது பணிமனையில் மேற்கொள்ளலாமென அறியத் தருகின்றோம்.

படிப்பகம்:

தாவடியில் இயங்கிய எமது படிப்பகத்தில் நூல்களை இரவல் பெற்றவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் எமது பணிமனையில் நூல்களை ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
புத்தூர் வீதி,
மீசாலை.

(சி/3039)

## உடன் தேவை

பாவிக்கக் கூடிய நல்ல நிலையிலுள்ள பின்வரும் பொருள்கள் உடன் தேவைப்படுகின்றன.

(1) இரும்பு பெட்டகம்
(2) அலுவலக தளபாடங்கள்
(3) கண்ணாடி அலுமாரிகள்

விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**சேரன் பணிமனை,**
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்.

(சி-3040)

## வேலை வாய்ப்பு

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் பாதுகாவலர்களுக்கான பதவிக்கு வெற்றிடங்கள் இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**சேரன் பணிமனை**
தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்.

(சி/3041)

## முக்கிய அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிபத்தில் தமது கடன் நிலுவைகளை இதுவரை செவ்வை பார்க்காத, கீழே குறிப்பிடப்பட்ட நிறுவன உரிமையாளர்கள் தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரியில் இயங்கும் சேரன் பணிமனைக்கு சமூகமளித்து தமது நிலுவைகளைச் சரிபார்த்துக் கொள்ளவும்.

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01. | விநாயகர் | அச்செழு |
| 02. | செல்வரட்ணம் திருப்பதி | அரியாலை |
| 03. | நல்லை தொழிலகம் | இணுவில் |
| 04. | எஸ். ரி. ஆர் அன் சன் | |
| 05. | சிவஞானம் சிமியோன் | இருபாலை |
| 06. | மணியம் களஞ்சியம் | திருநெல்வேலி |
| 07. | அருள் களஞ்சியம் | திருநெல்வேலி |
| 08. | யோகராஜா | சிக்கந்தன் வீதி, கோண்டாவில் |
| 09. | செந்தூரன் களஞ்சியம் | திருநெல்வேலி |
| 10. | அனுதினம் மருந்தகம் | சின்னக்கடை |
| 11. | பிள்ளையார் களஞ்சியம் | அருச்சனாசாலை யாழ்ப்பாணம் |
| 12. | புஸ்பா களஞ்சியம் | அரியாலை |
| 13. | வே. சி. ம. | மானிப்பாய் |
| 14. | நியூ வசந்தா களஞ்சியம் | கல்வியங்காடு |
| 15. | இராமையா செட்டியார் களஞ்சியம் | யாழ்ப்பாணம் |
| 16. | நாதன் களஞ்சியம் | நீர்வேலி |
| 17. | அம்பாள் களஞ்சியம் | திருநெல்வேலி |
| 18. | முருகன் | திருநெல்வேலி |

நிர்வாகம்,
**சேரன் பல்பொருள் வாணிபம்.**

(சி/3042)

## உடுவில் மகளிர் கல்லூரி

கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் தை மாதத்துக்கான வேதனத்தை சாவகச்சேரி, ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள பெண்கள் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (12-1-1996) காலை 10 மணிக்கு பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகிறீர்கள்.

இயக்குனர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(39946)

## தொடர்பு கொள்ளவும்

அளவெட்டியைச் சேர்ந்த இந்தியன் ஓவசீஸ் வங்கியில் பணியாற்றிய திரு. சுப்பிரமணியம் என்பவரை அவரது மகள் மந்தா கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுள்ளார்.

13, 32 ஆவது ஒழுங்கை
வெள்ளவத்தை.
தொலைபேசி இலக்கம்: 586339

(39949)

வயாவிளான்
மத்திய மகாவித்தியாலயம்

## பொன் விழா நிகழ்வு - I

(அமைதிக்கான பிரார்த்தனை)

இடம்:- அல்லாரை அறுகம்புலப்பிள்ளையார்ஆலயம்
காலம்:- 16 — 01 — 96 செவ்வாய் காலை 9 மணி

பிரதம விருந்தினர்கள்

★ பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் (இந்து நாகரிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

★ பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் (சமஸ்கிருதத்துறைத்தலைவர்,யாழ்.பல்கலைக்கழகம்)

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழையமாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| செ. செல்லரத்தினம்<br>செயலாளர்,<br>பா, அ. சங்கம். | ந. ஜெயகுமாரன்<br>செயலாளர்,<br>பழைய மாணவர் சங்கம். |

குறிப்பு: பெற்றோருடன் பாடசாலையின் எதிர்காலம் பற்றிய கலந்துரையாடலும் நடைபெறும்.

(39945) — அதிபர்

## சுவாமி விவேகானந்தர் பிறந்த தின வைபவம்

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை (13-1-96) நடைபெறவுள்ளன.

காலை 5-30 மணி தொடக்கம் மங்கள ஆரதி, விசேட பூசை, பஜனை என்பன இடம்பெறும்.

சிறப்பு நிகழ்ச்சி:
கீதாமிர்தவாரிதி ஞானசிரோன்மணி
நா. வி.மு. நவரத்தினம் குழுவினர் வழங்கும்
பக்தி இசை

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சுவாமி சித்ருபானந்தா.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (சி-3043)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீராவியடியில் இயங்கிய பவானி கச்சான் அலுவா தொழிலகம்

இதுவரை ஆரம்பமாகவில்லை என்பதையும், இதைப் பயன்படுத்தி சிலர் எமது பெயரைப் பாவித்து வருகின்றார்கள் என்பதையும், எனவே இதற்கும் எமது தொழிலகத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★ கொடுப்பனவுகள் யாவும் பவானி உரிமையாளரைத் தவிர வேறு எவருக்கும் வழங்க வேண்டாம்.

தொடர்புகளுக்கு:

**S. தனராஜா**
''நந்தவனம்''
உசன், மிருசுவில். (39941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கிளிநொச்சிக்கு நிவாரணம்

கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அரசாங்கம் பின்னடிப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

வலிகாமத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு மட்டும் சுமார் இரண்டு லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இவர்களில் சுமார் 30,000 பேர் பாடசாலைகளில் இயங்கும் நலனோம்பு முகாம்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அவர்களின் காணிகளில் கொட்டில்கள் அமைத்தும் வாழ்கின்றனர்.

இன்னும் சிலர் காடுகளைத் துப்புரவாக்கிக் குடியேறியுள்ளனர்.

இவர்களில் எவரும் இன்னும் தமக்கென ஒரு தொழிலைத் தேடிக்கொள்ளவில்லை. புனர்வாழ்வைத் தாமாகவே உருவாக்கிக் கொள்ளும் அளவுக்கு வசதியும் அவர்களிடம் இல்லை.

ஆகவே மொத்தத்தில் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்த சகல மக்களும் தமது உணவுக்கு நிவாரணத்தையே முழுக்க முழுக்க நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இம்மக்கள் இடம் பெயர்வதற்கு மூலகாரணமாக இருந்தது அரசாங்கமே; அதன் ஆயுதப்படைகள் நடத்திய ''சூரியப் பிரகாசம்'' இராணுவத் தாக்குதலே.

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த சகல மக்களுக்கும் அவர்கள் தமக்கு வருவாய் தரக்கூடிய தொழில் ஒன்றைப் பெறும் வரைக்கும், இயல்பு நிலையான வாழ்க்கைக்குத் திரும்பும் வரைக்கும் —

நிவாரணம் வழங்க வேண்டியது கொழும்பு அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்த வகையில், இடம் பெயர்ந்த வலிகாமம் மக்களின் நலன்களைக் கவனிப்பதாக அரசு வெளி உலகத்துக்குக் காட்டிக்கொள்வது உண்மைதான். பிரசாரத்தையும் அதற்கேற்ற விதத்தில் தடல்புடலாகச் செய்து வருகின்றது.

ஆனால் அது ஒய்யாரக் கொண்டையில் சொருகப்பட்ட தாழம்பூ தான்; உள்ளே இருப்பது வெறும் ஈரும் பேனும்!

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்துக்கு நாளாந்தம் 35 லொறிகளில் உணவுப் பொருள்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்க அரசு இணங்கியது.

ஆனால் —

கடந்த இருபது நாள்களாக, டிசம்பர் 22ஆம் திகதிக்குப் பின்னர், கிளிநொச்சிக்கு உணவுப் பொருள்கள் எதுவும் வந்து சேரவில்லை. வலிகாமத்தில் இருந்து கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணத்தை அனுப்பாமல் விடுவதன் மூலம் அவர்களைத் தண்டிக்க அரசு முனைகிறதா?

வலிகாமம் மக்களை அங்கு மீளக்குடியமர்த்துவதற்குக் காட்டும் அக்கறையை அவர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் அரசு காட்டாதிருப்பது, அதன் அரசியல் லாப நோக்கத்தினையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மக்களின் நலனைப் பற்றி அதற்கு சிறிதும் அக்கறையில்லை என்பதற்கு இது மற்றொரு அத்தாட்சி.

# ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் 15-ம் திகதி அங்குரார்ப்பணம்

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மிருசுவில் கரம்பகம்பகுதியில் ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

ஒரு மாத காலத்துக்குள் அமைத்து முடிப்பது என்ற இலக்குடன் ஆரம்பிக்கப்படும் இத் திட்டம் அரச அதிபராலும், அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இந்த திட்டத்தை செயற்படுத்த அமைக்கப்பட்ட தொழில் நுட்ப குழுவின் மேற்பார்வையில், யாழ். செயலகம், யாழ் மாநகர சபை ஊழியர்களால் வீடமைக்கும்பணி மேற்கொள்ளப்படும்.

இந்த வீடமைப்பு திட்டத்தில் 50 குழாய்கிணறுகள் அமைக்கப்படும். கழிவறைகள் அமைக்கப்படும். அத்துடன் சுகாதார நிலையங்களும், உணவு விநியோகிக்கும் கிளைகளும் அமைக்கப்படும்.

இந்த திட்டத்தில் அமையும் வீடுகளின் மாதிரிகள் செயலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளில் குடியேற விரும்புபவர்கள் விரும்பிய வீட்டை தெரிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத்துக்கான செலவில் 60 வீதத்தை அரச அதிபரும், மீதியை அரச சார்பற்ற அமைப்புகளும் வழங்கும்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியனவும் தமது பங்களிப்பை இத் திட்டத்துக்கு வழங்கியுள்ளன

தென்மராட்சிப் பகுதியில் பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களே இத்திட்டத்தில் குடியேற்றப்படவிருக்கின்றனர். (இ-3)

## முற்றோதல்

சாவகச்சேரி, ஜன. 12

தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்க வேண்டியும், நல்வாழ்வு, சமாதானம் வேண்டியும் கெருடாவில் கந்தசுவாமி கோவிலில் நாளை மறுதினம் ஞாயிறு காலை 8 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும். (அ)

# 85 வயோதிபர்கள் மாங்குளத்துக்கு

வடமராட்சி, ஜன. 12

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் வைத்து பராமரிக்கப்பட்டுவரும் 85 வயோதிபர்கள் மாங்குளத்திலுள்ள ஒடுமடுவுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ். திருச்சிலுவை கன்னியர் மடத்தினால் இந்த 85 வயோதிபர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒலுமடுவுக்கு இடமாற்றம் செய்யப்படும் இவ்வயோதிபர்களுக்கென அங்கு தனியான விடுதி ஒன்று அமைக்கப்படும். (இ-173)

# மரக்கறி விதைகள் குறைந்த விலையில்

## திணைக்களம் விற்பனை

மரக்கறி வகைகளின் உச்ச விலையையும்—

உச்ச பயன்பாட்டையும்— கருத்தில் கொண்டு, மக்கள் மத்தியில் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமுகமாக, விவசாயத் திணைக்களம் மரக்கறி விதைகளையும், விதை தா[illegible] வகைகளையும் 50 வீதம் மானிய விலையில் மீசாலை புத்தூர்ச்சந்தியில் உள்ள அலுவலகத்தில் வழங்கிவருகின்றது.

விற்பனையாகும் சில விதைகளின் விலை விவரங்கள் பின்வருமாறு:

தக்காளி:- 20 கிராம் விதை — ரூ. 80.

புசிற்றா:- 1 கிலோ விதை — ரூ. 275.

வெண்டி:- 50 கிராம் விதை — ரூ. 11-75 சதம்.

கறிமிளகாய்:- 10 கிராம் விதை — ரூ. 23.

டுபாய் பூசனி:- 10 கிராம் விதை — ரூ. 13.

அதேவேளை—

மக்கள் பலரும் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதால் கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாய திணைக்களத்தினர் கோரி உள்ளனர். (இ 31)

# அனுமதி இன்றி பனை தறித்தவருக்கு அபராதம்

அனுமதி இன்றிப் பனை மரங்களைத் தறித்த ஒருவருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னைவள அபிவிருத்திப் பகுதியினரால் அபராதம் விதிக்கப்பட்டது. தறித்த பனைமரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

வல்வெட்டித்துறை சமரபாகுவைச்சேர்ந்த சபாபதி சந்திரசேகரம் என்பவரே அபராதம் விதிக்கப்பட்டவர் ஆவார்.

வரணி இயற்றாவைப்பகுதியில் அனுமதி இன்றி ஆறு பனைமரங்களை தறித்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

பனை ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டு தறித்த பனை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (இ)

# ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அதிகார சபை

கொழும்பு, ஜன. 12

ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க ஆசிரியர் பயிற்சி அதிகார சபை ஒன்று விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரானா, தெரணியகலையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விரைவில் நடைமுறைக்கு வரவுள்ள புதிய கல்விக் கொள்கை மூலம் சிறந்த [illegible] கால தலைமுறையை [illegible] வாக்குவதற்காக இந்த அதிகார சபை அமைக்கப்படவிருக்கிறது.

10 கோடி ரூபா செலவில் 30 ஆயிரம் ஆசிரியர்களை பயிற்றுவிக்கக் கூடிய வகையில் இச்சபை நிறுவப்படும்.

இந்த சபை அமைக்கப்பட்டதும், ஆசிரியர்கள் தமது பயிற்சியை பூர்த்தி செய்யும் வரை கல்வி போதிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-[illegible])

# நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ் குறிப்பிடுவோரை கச்சாய்வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திக்கு நாளை 13 ஆம் திகதி 10. 00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

★ இந்திரன் மனோன்மணி — ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்,

★ பொன்னையா சோமசுந்தரம் — 10 C, செம்மணி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ திருமதி. தியாகராஜா தங்கம்மா — திக்கம்புரை, வசாவிளான்

★ வேலாயுதம் வள்ளியம்மை— உடையார் வளவு, இடைக்காடு, அச்சுவேலி.

★ சின்னத்தம்பி சிறிபாஸ்கரன் — வேதமகால், பண்ணாலை, தெல்லிப்பளை.

★ பொன்னுத்துரை நாகம்மா — இல. 22, 4ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ வீரசிங்கம் பாலச்சந்திரன்—நாவலடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ ராமசாமி தங்கமலர் அல்லது ராமசாமி ரஜனி — கீரிமலை வீதி, சித்தங்கேணி.

★ பொன்னம்பலம் இராசையா — மே. பா இராஜநாயகம் | அம்மன் கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ செல்லர் சற்குணம் (குணம்) — 352, அரசடி வீதி, நல்லூர்.

★ பொன்னையா இளையதம்பி —36/5, பண்டாரக்குளம் வீதி, நல்லூர்.

★ சின்னத்துரை செல்லாச்சி — கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

★ சின்னையா கந்தையா—அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

★ தெய்வேந்திரம் நாகேஸ்வரி — வள்ளியம்மன் கோவிலடி, சுழிபுரம்.

★ திருமதி. சிறிதவராசா உதயமலர் — அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ திருமதி ரமணி மகேந்திரன் — 172/1, கண்டி வீதி, அரியாலை.

★ அ. இராசையா—ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

★ அ. இராசையா சிவநேசன்—ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

★ சி. ஞானமூர்த்தி — ''ஞானபதி'', இணுவில் மேற்கு, சுன்னாகம்.

★ ஏகாம்பரம் ஜெயராஜா தவமணி — மல்வம், குறோஸ் வீதி, உடுவில்.

★ சடையன் கோபாலு – சீலன் வீதி, ஆவரங்கால்.

★ திருமதி, ஈஸ்வரி சின்னத்துரை — 232/6, தேவாலய ஒழுங்கை ஓட்டுமடம், யாழ்ப்பாணப்.

★ சின்னப்பு யேசுதாசன் — 16/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி. கெசிலியா. பாக்கியநாதன் — 96/2, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

★ M மார்க்கண்டு —M.S. லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ நடராசா சூரியநாதன் — மதவடி ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ அனிஸ்ரன் றேனுகா (டைமன்) — 42, புது றோட், கொய்யாத்தோட்டம், பாசையூர்.

★ செல்லையா கந்தையா (பனங்கட்டி) ஆனந்தா வீதி, மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.

★ சின்னத்துரை நிர்மலாதேவி — ''கலா பவனம்'', அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

★ திருமதி நகுலேஸ்வரி இராசசேகரம் — மே.பா. கணபதிப்பிள்ளை, ''செந்தில்'', அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ மயில்வாகனம் கணேசராசா அல்லது திருமதி பேரின்பகலைவாணி கணேசராசா — 28, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை, அரியாலை.

★ நடராசா பாக்கியம் — 97/2, A. V. Road, அரியாலை.

★ செல்லத்துரை மிரியாம் (பிளசம்) — மே. பா. தர்மகுலம், எழுதுமட்டுவாள், கிளாலி, (25, 1 ஆம் குறுக்குத்தெரு, பாசையூர்).

★ கலையரசி சின்னத்தம்பி அல்லது சின்னத்தம்பி சிவகுமார் — சந்திரங்கை, காளி கோவிலடி, இடைக்காடு, அச்சுவேலி.

★ திருமதி மனோன்மணி முத்துக்குமாரசாமி — 93/1 கோவில் வீதி, நல்லூர் அல்லது 6, கைலாச பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்.

★ திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் — ''லட்சுமி மகால்'' சோதி வேம்படி, மானிப்பாய்.

★ முத்தையா பூபாலராஜா — 81, பொன்னம்பலம் வீதி, அரியாலை.

★ இராமு சுப்பிரமணியம் — 596/6, K. K. S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

★ அன்னபூபதி கந்தையா — யாமா சந்தி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

★ சரஸ்வதி மகேசுத்தம்பி — அரசடி, கொக்குவில் மேற்கு.

★ நாகேஸ்வரி ராசையா— 32/1, 4 ஆம் குறுக்குத் தெரு. கொழும்புத்துறை. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்திலிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை ஒன்றை மேற்கொள்ள அரசு தீர்மானித்து இருந்தது.

ஆனால் இதனை உடனடியாக மேற்கொள்ள இராணுவ ஆள்பலம் போதாமல் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் முத்துவேலு

நீர்வேலியை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் முத்துவேலு தற்காலிக இருப்பிடமான கரவெட்டியில் 11-01-96 காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், கனேசதாசன் [சவுதி அரேபியா], சந்திரிக்கா (கொழும்பு), சூரியகலா [நியூசிலாந்து], மேகலா [மகாஜனாக் கல்லூரி ஆசிரியை] ஆகியோரின் அன்புத் தந்தையும், நிமலேந்திரன் [நியூசிலாந்து], கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அயிலவனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (11-01-96) வியாழக்கிழமை அன்னாரது தற்காலிக முகவரி கரவெட்டியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேகலா
(மகள்)

தற்காலிக விலாசம்:
அத்துளு அம்மன் மோவிலடி
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(40153)

## J. V. குலசிங்கம்

ஜோன் வேதரட்ணம் குலசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்கள் 08-01-1996 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் ராசமலர் (முன்னை நாள் ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் மோகன் (இங்கிலாந்து), சத்தி (கொழும்பு), சோபினி (கொழும்பு), சூட்டி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனும், தயாளினி, ருஷிரா, தபோ ஏபிரகாம் ஆகியோரின் மாமனாரும், தயன், பிரஞ்ஜோ ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 09-01-1996 செவ்வாயன்று நடைபெற்றது.

தகவல்:
மனைவி

35, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தற்போதைய முகவரி:
வெஸ்லி ஒழுங்கை,
கல்லூரி வீதி, பருத்தித்துறை
(40069)

## கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

(கோபால் மாஸ்டர் - ஓய்வுபெற்ற அதிபர்)

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் காலமானார்.

இவர் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், தே. செல்வநாயகி, ச. ஞானவேல் (நோர்வே), ப. அருள்நாயகி, ப. யோகநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. கே. பாலசிங்கம், திருமதி பொன்னையா சின்னம்மாவின் அன்புச் சகோதரரும், தா. இராமநாதன் (கனடா), தா. சண்முகநாதன் (லண்டன்), தா. கதிர்காமநாதன் (சுவிஸ்), திருமதி நாகராசா தெய்வநாயகி (தெகிவளை) ஆகியோரின் மைத்துனரும், ஐ. தேவராசா (நெல்லியடி விற்பனை நிலையம், நெல்லியடி), இ. சற்குணராசா (ஸ்ரீமுருகன் களஞ்சியம், கொடிகாமம்) ஆகியோரின் மாமனாரும், அர்ச்சனா, யாமுஜாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (11-1-96) வியாழக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. தேவராசா (தேவன்)
ச. சற்குணராசா (ஐயா)

அல்வாய் வடக்கு.
(40072)

## நூல் வெளியீட்டு விழா

சாவகச்சேரி, ஜன. 12

''ஸ்நபந மஞ்ஜரி'' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று சரசாலையில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா எழுதிய இந்நூல் சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படும்.

பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் இவ்விழாவுக்கு தலைமை வகிப்பார்.

திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் தம்பதியினரின் ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு இந்த நூல் வெளியிட்டு வைக்கப்படுகிறது. (அ)

## போலியோ தடுப்பு மருந்து

சாவகச்சேரி ஜன. 12

கடந்த மாதம் வழங்கப்பட்ட போலியோத் தடுப்பு மருந்தை பெறத் தவறிய 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நாளை சனிக்கிழமை போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்படும் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (இ-7)

## தபால்களை சேர்ப்பிக்குக

ஹபரண கப்பலில் வெளியூர்களுக்கான தபால்கள் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

பொதுமக்கள் இன்று வெள்ளிக்கிழமைக்குள் தபால்களை தபால் பெட்டிகளில் சேர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பத்திரிகையாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவும் —

வடக்கே பத்திரிகையாளர்கள் செல்வதற்கு தடைவிதிக்கும் சட்ட விதிகள் எதுவும் இல்லை என்றாலும், அப்படி பத்திரிகையாளர்களை அனுமதித்தால் இராணுவ நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என அரசு வட்டாரங்கள் நம்புகின்றன என்றும் —

தகவல் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் (உ-3)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன; புலிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அங்கு வரச் செய்யும் முயற்சியில் அரசு தற்போது ஈடுபட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியும் விரைவில் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும்.

புலிகளை முழுவதுமாகத் தோற்கடித்த பின்னரே அரசின் அதிகாரப்பகிர்வுத் திட்டம், மக்களின் அங்கீகாரத்துக்காக அவர்களின் முன் சமர்ப்பிக்கப்படும்—என்றார். (உ-3-6)

## இடம்பெயர்ந்துள்ள....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, முல்லைத்திவு பகுதியில் 6 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்

அதே சமயம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 3 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு தேவையான கூரைத் பொலித்தின் எடுத்துவரப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு ஜெகநாதன் (மல்லி)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும் மல்லாகத்தில் வசித்தவருமான மார்க்கண்டு ஜெகநாதன் (மல்லி) (லொறிச் சாரதி) நேற்று முன்தினம் இரணைமடுவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் இரணைமடு, 55 ஆம் கட்டையில் உள்ள அன்னாரது தற்காலிக இல்லத்தில் இன்று நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுசீலா (மனைவி)
நவரத்தினம் (மைத்துனர்)

(40157)

## கதிரவேலு தங்கம்மா

அராலியை பிறப்பிடமாகவும், தற்போது தச்சன் தோப்பை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு தங்கம்மா நேற்று (11-01-96) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, முத்துராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, நாகம்மா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-01-96) மாலை 2.00 மணி அளவில் அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேமபிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கந்தையா

தச்சன்தோப்பு,
கைதடி.
(40158)

## சுந்தரம்பிள்ளை கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் (11. 01. 96) நேற்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம் (டிறிபேக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர்), திருமதி கமலாதேவி கணேசலிங்கம், திருமதி விமலாதேவி சிவகுருநாதன் (ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சண்முகசுந்தரம் - ஆலாலசுந்தரம், திருமதி சந்திராதேவி பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தனலட்சுமி சிவபாதசுந்தரம், திருக்கணேசலிங்கம் (இளைப்பாறிய இலங்கை வங்கி மேற்பார்வையாளர்), திரு. பொ. சிவகுருநாதன் (இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்), திருமதி செல்வநாயகி சண்முகசுந்தரம், திருமதி தேவகி ஆலாலசுந்தரம், திரு.தி. பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12-01-96) இன்று வெள்ளிக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி. ப 2. மணிக்கு ஊரிப்பிட்டி மாயானத்தில் அந்தியேட்டிக்கிரியைகளும் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
கணபதிப்பிள்ளை சண்முகசுந்தரம்
(மகன்)

(40159)



(39841)

உ

ஓம் சக்தி

## ★ வாழ்த்துகிறோம் ★

இன்று ஷஷ்டியப்த பூர்த்தி காணும் எமது ஆலய பிரதம குரு
திருக்கணித பஞ்ஞாங்க கணிதர்
''வேதாகம சோதிட பூஷணம், சிவாச்சார்ய திலகம், சிவாகம பூஷணம்''

**சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்**
**இராஜேஸ்வரி அம்மா தம்பதிகள்**

அம்பிகையின் அருள்பெற்று சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

இலந்தைத்திடல், ★ ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
சரசாலை, சாவகச்சேரி. ★ ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தொண்டர் சபை

குறிப்பு:- ஷஷ்டியப்த பூர்த்தியையிட்டு இன்று மாலை 3 மணிக்கு எமது ஆலயத்தில் ''ஸ்நபந மஞ்ஜரி'' என்ற நூலின் வெளியீடு நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 12-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.